

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.08.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 12 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 9.55 இலட்சம் மதிப்பில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.08.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கவுள்ள 7 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு செலவீன தொகையாக ரூ. 17.45 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அ.தி.மு.க. ஆட்சியில் மருத்துவத்துறையில் எத்தனை பணியிடங்கள் நிரப்பப்பட்டன?

# திராவிட மாடல் ஆட்சியில் 6744 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன!

## எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை!

சென்னை,ஆக.31-

திமுக ஆட்சியில் 3 ஆண்டுகளில் மருத்துவத்துறையில் 6744 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது என்றும் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் அரசு பணியில் சேருபவர்களுக்கு கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்பும் இடங்களுக்கு பணி ஆணை வழங்கியதில்லை ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் கலந்தாய்வு மூலம் பணிநியமனம் என்றும் குறிப்பிட்டு எடப்பாடி பழனிச்சாமியின் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை தொடர்பான கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில் அளித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ற்று நேரத்திற்கு முன்னாள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.அந்த அறிக்கையில் ஒரு 4 பிரச்சினைகள் குறித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார். சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் இன்று காலை கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டதாகவும், டவர் பிளாக் 3 க்குப் பின்னால் கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டதாக தொலைக்காட்சி செய்தி வெளியிடப்பட்டிருந்தது, நானும் கூட பார்த்தேன், இதுகுறித்து கல்லூரி முதல்வர் அவர்களிடம் கேட்டேன், அவர் சொன்னார் மெட்ரோ இரயில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரணத்தினால் இன்று காலை சிறிய அளவிலான பாதிப்பு ஏற்பட்டு சுமார் 20 நிமிடங்கள் அந்த கழிவுநீர் வந்திருக்கிறது.

அதனையும் உடனடியாக யாரோ தொலைக்காட்சிதகவல்தந்து வீடியோ எடுத்துள்ளார்கள், ஆனாலும் அது உடனடியாக சரி செய்யப்பட்டு இதற்கான பதிவையும் சம்மந்தப்பட்ட தொலைக்காட்சிக்கு கல்லூரியின் முதல்வர் அனுப்பி அவர்களும் அந்த பதிலை பதிவு செய்து விட்டார்கள், இவ்வளவுதான் இந்த விஷயம், ஆனால் எதிர்க்கட்சித் தலைவருக்கு இது பூதாகாரமாக தெரிந்திருக்கிறது. ஏதோ அம்மருத்துவமனைக்கு வருபவர்கள் எல்லாம் நோய் வாய்பட்டு பாதிக்கப்படுவது போலவும், பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு சிகிச்சை அளித்து வரும் இம்மருத்துவமனைக்கு களங்கம் விளைவிப்பது போலவும், இது ஒரு சிறிய பிரச்சினை, இந்த சிறிய பிரச்சினைக்கு ஏற்பட்ட தீர்வு, இதைக்கூட தெரிந்துக் கொள்ளாமல் அவர் பெரிய அறிக்கையை விட்டிருப்பது என்பது 4 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர், இதனையெல்லாம் தெரிந்து கொண்டு அறிக்கை விட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதுமட்டுமல்லாமல் அந்த அறிக்கையில் இன்னொரு செய்தியினையும் தெரிவித்திருக்கிறார்,

**திராவிட மாடல் ஆட்சியில் பணிநியமனங்கள்:**

மருத்துவத்துறையில் காலிப்பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார், இன்று காலை கூட 127 உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நானும், துறையின் செயலாளர் அவர்களும் கடந்த வாரம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மருந்தாளுநர்கள் 947 பேருக்கும், 523 உதவியாளர்கள் பணியிடங்களுக்கும், 5 மருத்துவத் துறை அதிகாரிகள் என பணி நியமன ஆணையினை முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. நாங்கள் கலைவாணர் அரங்கத்திலிருந்து தந்தோம்.கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னாள் 977 செவிலியர்களுக்கு பணிநியமன ஆணைகளை தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக கூட்டரங்கில் தந்தோம். இந்நிகழ்விற்கு முன் 1021 மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கப்பட்டது.

இந்த ஆட்சி பொறுப்பேற்று கடந்த 3 ஆண்டுகளாக இதுவரை 1947 உதவி மருத்துவர்கள் பணியிடங்களும், 1291 மருத்துவம் சார்ந்த பணியிடங்களும், 977 தற்காலிக செவிலியர்களுக்கு நிரந்தர செவிலியர்களாக பணிநிரந்தரம் செய்திருப்பது, 946 மருந்தாளுநர்களுக்கு பணி ஆணைகள் தரப்பட்டிருக்கிறது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் (TNPSC) உதவியாளர்கள், தட்டச்சர்கள், இளநிலை உதவியாளர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள், சுகாதார அலுவலர்கள் என 1583 பேருக்கு என ஆக மொத்தம் இந்த மூன்று ஆண்டுகளில் 6,744 பேருக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. பெருமதிப்பிற்குரிய எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள், 4 ஆண்டுகள் நீங்கள் முதலமைச்சராக இருந்தீர்கள், இந்த துறையில் எத்தனை காலிப்பணியிடங்களை நிரப்பியிருக்கிறீர்கள், எவ்வளவு காலிப்பணியிடங்கள் இருந்தது, எவ்வளவு பணியிடங்கள் 4 ஆண்டுகளில் நிரப்பியிருக்கிறீர்கள், எங்களது ஆட்சியில் 3 ஆண்டுகளில் 6744 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது, 4 ஆண்டுகளில் நீங்கள் செய்த காரியம் என்ன? இதனை நானும் கேள்வியாக கேட்க தயாராக இருக்கின்றேன், அதுமட்டுமல்லாமல் தற்போது நிரப்பப்படும் பணியிடங்கள் எல்லாம் வெளிப்படைத்தன்மையோடு தகுதி படைத்தவர்களுக்கு மட்டுமே பணியினை தந்துக் கொண்டிருக்கிறோம். மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் (MRB) சரியான தகுதி படைத்தவர்களுக்கு மட்டுமே இப்பணியாணைகள் தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்தியாவில் உள்ள எந்த மாநிலங்களிலும் முதல் அரசுப் பணி தரும் போது கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டத்தில்லை, ஆனால் தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 1021 மருத்துவர்கள் பணியிடங்களும், 977 செவிலியர் பணியிடங்களும், 946 மருந்தாளுநர் பணியிடங்களும், 523 உதவியாளர் பணியிடங்களும், இன்று வழங்கப்பட்ட 127 உணவு பாதுகாப்பு அலுவலர் பணியிடங்களும் கலந்தாய்வு நடத்தி பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் உங்கள் ஆட்சி இருந்துள்ளது, அதில் நீங்கள் 4 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள், இதில் ஏதாவது ஒரு துறையில் முதன் முறை அரசு ஊழியர்களுக்கு (Fresh candidate) கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணி ஆணைகள் தந்தது உண்டா? என்பதை அவர் வெளிப்படுத்த வேண்டும்.

**மருத்துவக்கல்லூரி முதல்வர் பணிநியமனம்:**

இன்னொரு செய்தியினை சொல்கிறார், அரசு மருத்துவக்கல்லூரிகளில் முதல்வர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்று சொல்கிறார், கல்லூரி முதல்வர்களை பொறுத்தவரை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், மாதம் கடைசி காலங்களில் முதல்வர்கள் ஓய்வு பெறுவார்கள், ஓய்வு பெறும் கடைசி நாளில் அக்கல்லூரிகளுக்கு பொறுப்பு முதல்வர்கள் நியமனம் செய்து அவர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு விடும். இவர் 5 மணிக்கு ஓய்வு பெற்று வெளியில் செல்கிறார் என்றால் 5.01 மணிக்கு புதிய பொறுப்பு முதல்வர்கள் பணியினை ஏற்றுக் கொள்வார்கள்.எந்த கல்லூரிகளிலும் முதல்வர்கள் இல்லாமல் இல்லை. எந்த பணிகளும் இதனால் தடைபடாது, எங்கள் அரசு பொறுப்பேற்கும் போது 25 மருத்துவக்கல்லூரிகள் இருந்தது, அதில் 10க்கும் மேற்பட்ட மருத்துவக்கல்லூரிகளில் முதல்வர்கள் பணியிடம் காலியாகத்தான் இருந்தது, இந்த அரசு பொறுப்பேற்றபிறகுதான் புதிய முதல்வர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டது. தற்போது உள்ள 36 அரசு மருத்துவக்கல்லூரிகளில் 11 மருத்துவக்கல்லூரிகளில் முதல்வர்கள் ஓய்வு பெற்றதற்கு பிறகு பொறுப்பு முதல்வர்கள் இருக்கிறார்கள், தற்போது இத்துறையின் சார்பில் புதிய கல்லூரி முதல்வர்களை நியமனம் செய்வதற்கு 26 மருத்துவர்கள் அடங்கிய பதவி உயர்வு பட்டியல் (Panel) தயாரிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த பட்டியல் தயாரிக்கும் போது அவர்களது வயது, கல்வித்தகுதி, பணிக்காலத்தில் ஆற்றிய சேவைகள் ஆகியவை அனைத்தையும் கணக்கில் கொண்டு அவர்களை பதவி உயர்வு பட்டியலில் சேரக்கப்பட வேண்டும், அப்படி தகுதி இல்லாதவர்களை சேர்த்தாலும், தகுதியுடையவர்கள் விடுபட்டாலும் நீதிமன்றத்திற்கு சென்று விடுவார்கள், இதனால் பதவி உயர்வு பட்டியல் தயாரிப்பது மிக கவனமாக தயாரிக்கும் நிலை உள்ளது. இப்பணிகள் ஒரு சில நாட்களில் முடிவடைந்து விடும், அதன்படி தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவக்கல்லூரி முதல்வர்களுக்கும் கலந்தாய்வு மூலம் பணி ஆணைகள் வழங்கப்படும். இதற்குமுன் தங்களுக்கு வேண்டியவர்களை விரும்பும் இடங்களுக்கு ஆணையினை வழங்கியிருந்தார்கள், தற்போது அப்படி இல்லை, எந்த கல்லூரிகளுக்கு செல்ல வேண்டும் என்பதை அவர்களின் கருத்துக்களைப் பெற்று கலந்தாய்வு மூலம் அனுப்பப்படவிருக்கிறார்கள். இன்னும் ஒரு வார காலத்திற்குள் அப்பணிகள் நடைபெறும். இது போன்ற நிகழ்வுகள் எதுவும் தெரியாமல் முன்னாள் முதல்வர் அறிக்கை வெளியிட்டிருப்பது நகைப்புக்குரிய ஒன்றாகும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

## நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை

### ஒன்றிய, நகர, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்

**16.08.2024 அன்று நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய, நகர், பேரூர் பகுதிகளுக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் நடைபெறும்.**



| வ. எண் | நாள் | தொகுதி | ஒன்றிய/நகர/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 01.09.2024 | 095 - பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதி | பரமத்தி ஒன்றியம் | 10.30 AM | சமுதாயக்கூடம், நடந்தை. |
| 2 | 01.09.2024 | | கபிலர்மலை ஒன்றியம் | 11.30 AM | கொங்கு திருமண மண்டபம், கபிலர்மலை. |
| 3 | 01.09.2024 | | மோகனூர் மேற்கு ஒன்றியம் | 1.00 PM | புகழி மண்டபம், செங்கப்பள்ளி. |
| 4 | 01.09.2024 | | வெங்கரை பேரூர், பாண்டமங்கலம் பேரூர், பொத்தனூர் பேரூர் | 3.00 PM | R.K.திருமண மண்டபம், பொத்தனூர். |
| 5 | 01.09.2024 | | வேலூர் பேரூர், பரமத்தி பேரூர் | 4.30 PM | ஆதிதிராவிடர் நலத்துறை திருமண மண்டபம், மோகனூர் ரோடு, கவுண்டம்பாளையம். |
| 6 | 03.09.2024 | | எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றியம் | 2.00 PM | மாரியம்மன் திருமண மண்டபம், மேட்டுப்புதூர், மாணிக்கம்பாளையம். |
| 7 | 02.09.2024 | 097 - குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி | பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியம், படைவீடு பேரூர் | 9.30 AM | கண்ணப்பநாய்க்கர் மண்டபம், மேட்டுக்கடை, தட்டாங்குட்டை. |
| 8 | 02.09.2024 | | குமாரபாளையம் வடக்கு நகரம், குமாரபாளையம் தெற்கு நகரம் | 11.30 AM | இராஜேஸ்வரி திருமண மண்டபம், முதலியார் தெரு, குமாரபாளையம். |
| 9 | 02.09.2024 | | பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம் | 12.30 PM | செல்லம்மாள் திருமண மண்டபம், ஈ.காட்டூர். |
| 10 | 02.09.2024 | | பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம், ஆலாம்பாளையம் பேரூர் | 3.30 PM | பெருமாள் கோவில் மண்டபம், அண்ணா நகர், காடச்சநல்லூர். |
| 11 | 02.09.2024 | | பள்ளிபாளையம் நகரம் | 5.00 PM | கர்ணா மஹால், புதன் சந்தை அருகில், பள்ளிபாளையம். |
| 12 | 03.09.2024 | 096 - திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி | மல்லசமுத்திரம் ஒன்றியம், மல்லசமுத்திரம் பேரூர் | 10.00 AM | செங்குந்தர் திருமண மண்டபம், சந்தைப்பாவடி, மல்லசமுத்திரம். |
| 13 | 03.09.2024 | | திருச்செங்கோடு ஒன்றியம் | 11.30 AM | சக்தி முருகன் திருமண மண்டபம், வரகூராம்பட்டி. |
| 14 | 03.09.2024 | | எலச்சிபாளையம் மேற்கு ஒன்றியம் | 1.00 PM | முத்து மஹால், பிரிவு ரோடு, குமரமங்கலம். |
| 15 | 03.09.2024 | | திருச்செங்கோடு நகரம் | 6.00 PM | நானா நானி ஹோட்டல், கூட்டப்பள்ளி. |

**இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட கழகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபின், தமிழர்களின் கலை, பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை பறைசாற்றும் பெட்டகங்களாக திகழும் தொன்மையான திருக்கோயில்களைப் புனரமைத்து பாதுகாத்திடும் வகையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், 2,000–வது குடமுழுக்காக மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், பரசலூர், வீரட்டேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. மகா கும்பாபிஷேக விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார் உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் மற்றும் தர்மபுர ஆதினம் உள்ளிட்ட பலவேறு ஆதினங்கள் உள்ளனர்.

### கோவை தெற்கு மாவட்டம்

# சூலூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## தளபதி முருகேசன், ப.ராஜ்குமார் எம்.பி. பங்கேற்பு! ஒன்றியச் செயலாளர் த.மன்னவன் அறிவிப்பு!

கோவை, ஆக. 31-

கோவை சூலூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம், இன்று (31.8.2024) மாலை 4.00 மணியளவில்,பகவதி அம்மன் திருமண மண்டபம்,பட்டணத்தில் நடைபெற உள்ளது.

இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில்,கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் ப.ராஜ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு, சூலூர் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட கரவழி மாதப்பூர்,காடம்பாடி,காங்கேயன்பாளையம்,கலங்கல்,பீடம்பள்ளி,பட்டணம் ஆகிய கிளை கழக நிர்வாகிகள்,மாவட்ட கழக நிர்வாகிகள்,தலைமைக் கழக நிர்வாகிகள்,பொது உறுப்பினர்கள்,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,அனைத்து கழக செயல் வீரர்கள்,BLA2 பூத் கமிட்டி உறுப்பினர்கள்,கழகத் தொண்டர்கள், மற்றும் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன் ஏன கோவை சூலூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் த.மன்னவன் தெரிவித்துள்ளார்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி–234/77 ஆய்வுத் திட்டத்தின் கீழ் 176ஆவது ஆய்வை சட்டமன்ற உறுப்பினர் பிரின்சின் குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொண்டார். குளச்சல் பகுதியில் அமைந்துள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு எண்ணும் எழுத்தும் வகுப்பறை, பயன்பாடில்லாத கட்டடங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் உணவு உட்கொள்ளும் மாணவர்களுடன் கலந்துரையாடி ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.